Duplicating
ஆங்கிலத்திலும் தமிழிலும்
Notes, கேள்விப்பத்திரங்கள்,
குறிப்புகள் முதலியன
CYCLO-STYLE செய்யவும்
போட்டோஸ்டாட் பிரதிகளுக்கும்
ஊப்பகனன்!
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 10 மார்கழி 10 முஹறம்: 24 இதழ் 311
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 25-12-78

எமது வாடிக்கையாளர்களுக்கு
நத்தார்பு-துவருட
வாழ்த்துக்கள்
அழகிய நகைகளுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்.
ஓடர் நகைகள் குறித்த நேரத்தில்
செய்து கொடுக்கப்படும்.
செல்லையா சிவலிங்கம்
தங்கப்பவுண் நகைவியாபாரம்
190, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
போன்: 7162

★ நாட்டின் பல பகுதிகளில், பரவலாக

# இன்று மாலைவரை கடும்மழை!

# மட்டுநகரில் மீண்டும் வெள்ளம்

## நாளைமுதல் காலநிலைசீராகும்

(கொழும்பு)

**நாட்டின் பல பகுதிகளிலும், பரவலாக, தொடர்ச்சியாகப் பெய்யும் பெரும்மழை காரணமாக; பல பகுதிகள் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பில் மீண்டும் பெரும் வெள்ளஅபாயம் ஏற்பட்டுள்ளது.**

வங்காளக் கடலில் உருக்கொண்ட தாழமுக்கம், வடமேற்கு நோக்கி நகரத்தொடங்கி விட்டதென்றும் தமிழ்நாட்டின் கரையோரப் பகுதிகளில் கடுங்காற்றுடன் மழை பெய்யும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு காலநிலை அவதான நிலையம் நேற்றிரவு விடுத்த செய்தியில் தாழமுக்கப்பலயம் இலங்கைக்கு மேலாக மேற்கு நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறதென்றும் வடக்கு, கிழக்கில் நாளை திங்கட்கிழமை மாலைவரை கடும்மழை இருக்குமென்றும் அதன் பின்னர் காலநிலை சீரடையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில், கடந்த இரு தினங்களாக தொடர்ச்சியாக அடைமழை பெய்துவருவதால் மக்கள் பலத்த கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்.

தாழ்ந்த பகுதிகள மூழ்கி வருகின்றன. மட்டக்களப்பு வாவியின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

அகதிகளை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்புவதில் அதிகாரிகள ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே சூருவளியினுல் பாதிக்கப்பட்டு வீடிழந்த கிழக்கு மாகாணமக்கள் மீண்டும் பயங்கர பேய் மழையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். சூருவளி அகதிகளாகி, அரைகுறையாக நிவாரணம் பெற்ற அநேகர் மீண்டும் வெள்ள அகதிகளாகும் அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

மழை காரணமாக நிவாரண வேலைகள் நேற்று சில

(8-ம் பக்கம் பார்க்க)

## "கிழக்கிலங்கை மக்களின் துயர் துடைப்போம்"

### அதிமேற்றிராணியார் நத்தார் செய்தி

[கொழும்பு]

"சூருவளியினுல் பாதிக்கப்பட்ட கிழக்கிலங்கை மக்களின் துயர்துடைக்க, உங்களால் இயன்ற உதவிகளைத் தாராளமாகச் செய்யுங்கள" என்று, அதிமேற்றிராணியார் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ஞண்டோ நேற்றுவிடுத்த நத்தார்தினச் செய்தியில் கோரிக்கை விடுத்துள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

## நத்தார் வாழ்த்து

வாசகர்கள், விற்பனையாளர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் 'ஈழநாடு' தனது குதூகல நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

ஆ-ர்

## பஸ் சேவை பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

வெள்ளங்காரணமாகநேற்று மாலை முதல் தூர இடங்களுக்கான சகல பஸ் சேவைகளும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

கடும் மழை காரணமாக, புளியங்குளம், ஓமந்தை, பனிச்சங்குளத்தில், வீதிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

(8-ம் பக்கம்பார்க்க)

## சரண்சிங்கை

### கொலைசெய்ய முயற்சி

[புதுடில்லி]

முன்னுள இந்திய உளதுறை அமைச்சர் திரு சரண்சிங்கை கொலை செய்ய நேற்று மேற்கொளளப்பட்ட முயற்சி, பாதுகாப்பு ஊழியர்களினுல் எடுக்கப்பட்ட உஷார் நடவடிக்கையினுல் தடுக்கப்பட்டது.

திரு. சரண்சிங் தமது 76-வது பிறந்த நாளை தமது இல்லத்தில் கொண்டாடிக் கொண்டிருந்த போது, இருபது வயது இளைஞர் ஒருவர் திரு. சரண்சிங்குக்கு அன்பளிப்பு வழங்குவது போல முன்சென்று, கூரான ஆயுதமொன்றினுல் கொலைசெய்ய முயன்ருர் என்றும், ஆனுலும் பாதுகாப்பு ஊழியர்களின் உஷாரினுல் அந்த இளைஞன் உடனடியாக மடக்கப்பட்டு பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்றும் அறிவிக்கப்பட்டது.

றிக்கோ சுவைஞர்களுக்கும் மற்றனைவருக்கும்
எமது
நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்
அசல்
றிக்கோ கோப்பியை
உடனுக்குடன் அரைத்துப் பெற்றுக்கொள்ள
றிக்கோ ஹோட்டல்
யாழ்ப்பாணம்.

மற்றும்
2, 4 அவுன்ஸ்
பெட்டிகளிலும்
உங்கள் வியாபாரிகளிடம்
பெற்றுக்கொள்ளலாம்
போலிகளை வாங்கி
ஏமாறுதீர்கள்!
போன்: 464
றிக்கோ சுவீற் அன் கிறீம் ஹவுஸ்
370, ஆஸ்பத்திரி வீதி, (போன்: 464--7889) யாழ்ப்பாணம்.

சகலருக்கும் இனிய
நத்தார் - புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்
பட்டு. பருத்தி, பொலியஸ்டர், ரெற்ரேன்
கிரிம்லின் ஆடைகளை தெரிவுசெய்ய
த. குமாரசாமி
ரெக்ஸ்ரைல்ஸ்
42, 44, பெரியகடை -- யாழ்ப்பாணம்
தந்தி: குமாரசாமி. ரெலிபோன்: 7034.

## வரி விளம்பரம்

### தேவை

வேப்பம் விதைகள், கொப்பரு யாவும் எமக்குக் கூடியளவில் தேவை உடன் கொள்வனவு எமது இடத்தில் வைத்தே செய்கின்றோம். அத்துடன் வேப்பெண்ணை பாவனையாளர்களுக்குச் சுத்தமான முறையில் அவர்கள் கொண்டுவரும் வேப்பம் விதைகளை நாம் கூலிக்கும் அரைத்துச் கொடுப்போம். மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். முகாமையாளர், சி. எஸ். கே. மில்ஸ், யாழ்ப்பாணம். 1130

### விற்பனைக்கு

புதிய "Honda Benly" 110 C. C. பிறைவேஸ் வசதி செய்து கொடுக்கப்படும். பிளவ்ஸ், ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். 1147

3 ஸ்ரீ லம்பிரற்ற ஸ்கூட்டர் [இத்தாலி] வேலை நாட்களில் ராம்சன், 19, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்திலும் ..டு முறை நாட்களில் R. குமார், "அருமை இல்லம்", சுதுமலை வடக்கு, மானிப்பாயிலும் பார்வையிடலாம். 1146

### பயிற்சி

3 மாத டிப்ளோமா மோட்டார் மெக்கானிக் பயிற்சி 05-01-1979 ஆரம்பமாகவுள்ளது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி 11/B மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 1136

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# "தனிநாடு அமையுங்கள் என்று ஆலோசனை வழங்கமாட்டோம்"

## புதியசமசமாஜக் கட்சிச்செயலாளர் உரை

[நெல்லியடி]

"தமிழ்பேசும் இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்ற நாம், தமிழ்மக்கள் அதனை வென்றெடுப்பதற்காகத் தொடுக்கும் போராட்டங்களிலும் கலந்துகொள்வோம். ஆனால் தமிழ்பேசும் இனத்தைத் தனிநாடு அமைத்துச் செல்லுங்கள் என ஆலோசனை வழங்க நாம் தயார் இல்லை"

புதிய லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளர் திரு. அசோககருண விக்ரமபாகு. வதிரி தமிழ்மன்றத்தில் திரு. எம். எம் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

"இலங்கையில் தமிழினம் இன்று இன்னல்கள் பல பட்டுச் சொல்லொணாத் துயர் அடையக் காரணம், முதலாளித்துவ-ஏகாதிபத்திய அமைப்பேயாகும். இனப் பிரச்சினைகள் மட்டுமல்லாமல் இலங்கையில் காணப்படுகின்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மூலகாரணமாக அமைவது முதலாளித்துவ அரசியலமைப்பே ஆகும்.

### பல்வேறு பிரச்சினை

"இன்றைய கபலகட்டத்தில் இடதுசாரி இயக்கங்களின் முன் பல்வேறு பிரச்சினைகள் முன்னிற்கின்றன. முதலாளித்துவ-ஏகாதிபத்தியங்களை அழித்தொழிப்பது; சுயமான பொருளாதார அமைப்பை நிர்மாணித்தல்; சுதந்திர ஜனநாயகத்தை ஏற்படுத்தல்; தமிழினம் உட்பட ஏனைய தேசிய சிறுபான்மை இனங்களின் உரிமைகள் பற்றியனவேயாகும். இப்பிரச்சினைகளுக்காகத்தான் நாம் இடதுசாரி இயக்கங்களை ஒன்றுசேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைத்துப் புதிய தொழிற்சங்கச் செயற்குழுவையும் நிறுவியுள்ளோம். அண்மையில் 10 புதிய தொழிற்சங்கங்களையும் எம்முடன் இணைத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

### மக்களை ஒன்றிணைத்து...

"அரசியல், தொழிற்சங்கரீதியாக மட்டுமல்லாமல், கிராமிய மட்டத்தில் மக்களை ஒன்றிணைத்துவருகிறோம்' மக்கள் ஜனநாயகப் பாதுகாப்பு முன்னணி என்ற அமைப்பின் கீழ் இப்பணியைச் செய்கிறோம். இம்முன்னணி, கடந்த ஆகஸ்ட் கலவரத்தின்போது இசயற்பட்டது. சொற்ப தொகையானலும் செயலில் காட்டக்கூடியதாக இருந்து. இன்று கலகா, கம்பளை போன்ற பகுதிகளிலும், ஏனைய தோட்டங்களிலும் இம்முன்னணிகள் நிறுவப்பட்டுள்ளன. இடதுசாரிக் கட்சிகள், தொழிற்சங்கங்கள், பல்வேறு இன மக்களும் ஒன்று சேர்ந்து போராடினால் மட்டுமே இந்த முதலாளித்துவ அமைப்பைத் தகர்த்தெறிய முடியும்"

### தரப்படுத்தலை கையாளமாட்டோம்

இனப்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு நாம் உயர்கல்வி அனுமதியில் தரப்படுத்தல் முறை அல்லது மாவட்ட அடிப்படையிலேயோ கையாள மாட்டோம். ஒவ்வொரு மனிதனும் தத்தம் மொழியில் அரசுடன் தொடர்புகொள்ள வசதியும், உரிமையும் அளித்து தொழில், கல்வி மற்றும் எந்தத்துறையிலும் எந்த மதத்திற்கும் இனத்திற்கும், மொழிக்கும் விசேட சலுகைகள் காட்டமாட்டோம் என்பதனை தெளிவாக வற்புறுத்திக் கூறிவருகின்றோம்.

எந்தவொரு பிரச்னையையும் இல்லாதொழிக்க வர்க்கப் போராட்டம் ஒன்றே உரிய கருவியாகும். தொழிலாளர் விவசாயிகள் ஒற்றுமைப்பட்டு ஹர்த்தால் போன்ற போராட்டங்களை நடாத்தினால் முதலாளித்துவ அரசுகளும் அதன் பாதுகாப்பு அரண்களும் படைகளும் சிதைந்து போய் விடும். அதற்கென மக்களுக்கு ஆயுதங்கள் தேவையில்லை. சிலிநாட்டில் அலண்டே கொலை செய்யப்படவும், அவரின் ஆட்சி கவிழ்வதற்கும் பழைய பாராளுமன்ற ஆட்சி மட்டுமல்லாமல் பழைய முதலாளித்துவ அமைப்பு தொடர்ந்து நிலைத்தும் வந்ததே காரணமாகும். நாம் இந்த நிலையை நன்கு புரிந்து கொள்ளல் அவசியமாகும்.

### போட்டியிட்டது எதற்காக?

நாம் பாராளுமன்ற தேர் தேர்தல்களில் ஓரிரு இடங்களில் போட்டியிட்டோம். தொழிலாளர் - விவசாயிகளின் அபிலாசைகளை பாராளுமன்றத்தில் எடுத்துரைப்பதற்காகவே பாராளுமன்றத்தின் சில இடங்களைப் பெற முயன்றோம். பாராளுமன்ற ஆட்சியில் நமக்கு சந்தர்ப்பம் கிடைத்தால் அதனைச் சிறப்பாக பயன்படுத்துவோம்.

இலங்கையில் இடதுசாரி இயக்கம் செத்தொழிந்து விட்டது என முதலாளித்துவவாதிகள் கூறிவருகின்றார்கள். இதில் உண்மை எதுவும் இல்லை. சிறிலங்கா - சமசமாஜ - கம்யூனிஸ்ட் கூட்டு முன்னணியே செத்தொழிந்தது. மாறாக இடதுசாரி இயக்கங்கள் சாகவில்லை. கூட்டு முன்னணியின் சாதனை இந் நிலையைத் தோற்றுவித்தது எனலாம்.

மற்றும் உபசெயலாளர் திரு. வில்பட் பெரேரா, திரு. எஸ். மாசிலாமணி ஆகியோரும் உரையாற்றினர்கள்.

---


கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம், முல்லைத்தீவு.

### பொதுமுகாமையாளர் தரம் 111

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கைவாசிகளிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் தலைவர், கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், முல்லைத்தீவு என்ற விலாசத்துக்கு 5-1-79க்கிடையில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் தராதரம் ஏனைய விபரங்களை 31-12-78க்கிடையில் தபால் மூலம் அல்லது நேரில் மேற்படி கரைதுறைப்பற்றுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்.

1143


## வீதி நிலை மோசம்

(கோண்டாவில்)

கொக்குவில் கிராமசபை பிரிவினுள் அமைந்து இருக்கிம் அச்சுட்கூட வீதியின் நிலை மழைகாலங்களில் மிகவும் மோசமாகவிருக்கிறது. பள்ளமாக இருக்கும் பகுதியில் வெள்ளம் புகுந்து பெரும் கஷ்டம் விளைவிப்பது குறித்தும் போக்குவரத்து சீர்குலைவு குறித்தும் கிராமசபையிடம் முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை எனத் தெரிவிககப்படுகிறது. (உ)


## ராஜா ஸ்ரோர்ஸ்

நத்தார்-புதுவருஷ வாழ்த்துக்கள்!

கண்கவர் சோடனைச் சாமான்கள்
இறக்குமதி செய்யப்பட்ட
விசித்திர விளையாட்டுச்சாமான்களும்
சொக்லெட், இனிப்பு வகைகளும்
பால்மா - பழரசங்களும் - கேக் -
சாமான்களும்
இன்னும்
நவீன, நாகரீக-வீட்டுச்சாமான்களும்
தொகையாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள இன்றே விஜயம்செய்யுங்கள்.

67 & 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 372 | (தந்தி (ராஜா

அனைவருக்கும் எமது
நத்தார் - புதுவருட நல்வாழ்த்துக்கள்
உங்களுக்குத் தேவையான
சகல தங்க, வைர நகைகளுக்கு விஜயம் செய்யுங்கள்
கே. கே. வி.
யாழ்ப்பாணம் நகைமாளிகை,
82/4, கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்.
போன்: 362
சுத்தமான பவுனுக்கும் கண்ணைக்கவரும் நவீன
வேலைப்பாடுகளுக்கும் யாழ்ப்பாணத்தில் நம்பிக்கைவாய்ந்த ஸ்தாபனம்.
ஓடர்கள் குறித்ததவணையில் சிறந்தமுறையில் செய்து கொடுக்கப்படும்
K. K. V. JAFFNA JEWEL HOUSE,
82/4, KASTURIAR ROAD, — JAFFNA — PHONE: 362

அனைவருக்கும் எமது இனிய நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்...
சகல பொறியியல்சாதன தொழில்நுட்ப வேலைகளுக்கு வடஇலங்கையின் முன்னோடி நிறுவனம்
புரேமோட்டர்ஸ் என்ஜினியறிங் கொம்பனி லிமிட்.,
844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

# மட்டுநகருக்கு ரூ.22 லட்சம் செலவில் ரயில்நிலையம்

## அமைச்சர் அறிவிப்பு

(மட்டுநகர்)
மட்டக்களப்பில் 22 லட்சம் செலவில் புதிய ரயில் நிலையம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

இத்தகவலை போக்குவரத்து அமைச்சர் ஜனாப். எம். எச். முகமத் மட்டக்களப்பில் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் அதிக வசதிகளுடன் கூடிய பஸ் டிப்போ ஒன்று விரைவில் அமைக்கப்படும் என்றும் இது இரு கட்டங்களாக நிறைவேற்றப்படும் என்றும் ஜனாப். முகமத் கூறினார். (இ)

## இன்றைய இராசிப்பலன்

மார்கழி மாதம் 10-ந் திகதி திங்கட்கிழமை
(25-12-78)

**மேடம்:**— வாக்குவன்மையின்மூலம் பெரியோர்களின் ஆசியைப் பெறுவீர்கள். சிலர் வாழ்க்கையில் விருந்தினர் வருகைக்கும் இடமுண்டு. நாடகக் கலைஞர்களுக்குச் சிறப்பான தினம்.

**இடபம்:**— நண்பர்களின் நச்சரிப்பு மனக்குமைச்சலை ஏற்படுத்தும். கடமையாற்றுமிடத்தில் கழுகுப்பார்வை வட்டமிடும். முன்யோசனை வேண்டும்.

**மிதுனம்:**- பொதுத்துறையில் நாட்டம் ஏற்படும். சிலர் ஜுரத்தாலும் பீடிக்கப்படலாம். தந்தைவழிமூலம் ஆதரவுக்கு இடமுண்டு.

**கடகம்:**— எதிலும் ஒரு மாற்றத்தை விரும்புவீர்கள். மனதில் புதிய எண்ணங்கள் தோன்றும். வியாபாரிகளுக்கு ஆதாயம் கிடைக்கும்.

**சிங்கம்:**— அதிஷ்டலாபங்களுக்கான அறிகுறிகள் தென்படும். தாராளகுணத்தின் மூலம் தனமும் செலவாகும். சிலருக்கு வாகன விருத்தியுமுண்டு.

**கன்னி:**— நடையில் தயக்கம் ஏற்படும். எதிர்பாராத விபத்துக்கும் இடமேற்படும், எதிர்பாராத செலவினங்களுக்கும் இடமுண்டு. நிதானம் வேண்டும்.

**துலாம்:**— மனப்போராட்டங்களுக்கிடமுண்டு. உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கக்கூடும். பிள்ளையொன்றின் உடல்நலமும் பாதிக்கப்படலாம். பொறுமை நன்று.

**விருச்சிகம்**— வார்த்தைஜாலம் செய்வதன்மூலம் இருக்கும் இடத்தில் ஆதரவு பெருகும். சிலருக்கு பொதுஜனத் தலைமையும் கிடைக்கும்.

**தனுசு:**— பிரிவின் தாக்குதல்கள் வேதனையைத்தரும். குடும்பக்கவலை தலைதூக்கும். பணவிவகாரத்தில் அபிப்பிராய பேதம் தோன்றக்கூடும். சுமாரான தினம்.

**மகரம்:**— வாகனம் செலுத்துவோருக்கு நன்மதிப்புக் கிடைக்கும் ஆசிரியர்களுக்கு நல்லநாள். கல்வித்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும்.

**கும்பம்:**— நீண்டநாள் பிணி நிவர்த்தியாவதற்கிடமுண்டு. பிள்ளையொன்றின் கல்வி முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும். புதிய நண்பர்களின் சேர்க்கையும் கிடைக்கும்.

**மீனம்:**:— வரவிலும் தடைகள் ஏற்படும். வழக்கு விவகாரத்தில் மாட்டிக்கொள்ள வேண்டாம். நீண்ட நாட் பிரயாணம் கவலையைத்தரலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## சித்திரத் தேர் வேலைகள் துரிதம்

[சுழிபுரம்]
பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் கோவில் புதிய சித்திரத் தேர் செய்வதற்காக தமிழக சிற்பக்கலைஞர் திரு. ஏகாம்பரஸ்தபதியார் வந்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக ஸ்தம்பித்திருந்த தேர்வேலைகள் சிற்பக்கலைஞர் வருகையால் மீண்டும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. உள்ளூர் கலைஞர்கள் சிலரும் வேலைசெய்துவருகின்றனர். மேலும் சில கலைஞர்கள் தமிழகத்திலிருந்து அழைக்கப்படவுள்ளனர். இரண்டு வருடங்களுக்குள் தேர் வேலைகள் யாவும் பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. [உ]

## "பாரம்பரிய சொத்தான நடனக்கலையை வளர்ப்பது தமிழ்மக்களது கடமை"

### திருமதி மங்கையர்க்கரசி கருத்து

(யாழ்ப்பாணம்)
"இசையும் நடனமும் எமது இனிய மொழியில் அமைந்துள்ள கவின்கலைகளாகும். முன்னர் ஒரு சிலருக்குமட்டுமே தெரிந்திருந்த தெய்வாம்சம் பொருந்திய நடனக்கலை இன்று மூலைமுடுக்குகளில் எல்லாம் பரவி உயர்ந்த ஒரு ஸ்தானத்தையும் வகித்துவருகிறது."

இவ்வாறு சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெரிவித்தார்.

குரும்பசிட்டியைச் சேர்ந்தவரும் செல்வி தயாநிதி சுப்பிரமணியத்தின் நடன அரங்கேற்றத்திற்குத் தலைமைவகித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

செல்வி ஜெயபத்மினி சின்னத்துரையின் முதலாவது மாணவியான இந்த அரங்கேற்ற நிகழ்ச்சி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

சிவத்தமிழ்ச் செல்வி மேலும் பேசுகையில் "செல்வி ஜெயபத்மினி சின்னத்துரையை நடன குருவாகக்கொண்டு பயிற்சி பெற்ற தயாநிதியின் அரங்கேற்றம் நமக்கெல்லாம் ஒரு பெரு விருந்து" என்றார்.

வடமாநில வித்தியாதிபதி திரு. ரி. மாணிக்கவாசகர் பேசுகையில், சிவ வழிபாட்டுக்கும் நடனக் கலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்றும் இக்கலையை வளர்க்க இது போன்ற அரங்கேற்றங்கள் நிகழ்த்தப்படவேண்டும் என்றும் சொன்னார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் சார்பில் கலந்துகொண்ட திருமதி ம. அமிர்தலிங்கம் பேசுகையில், தமிழ் மக்களின் பாரம்பரிய சொத்தான நடனக் கலையைப் பாதுகாத்து மேலும் வளர்ப்பது தமிழ் மக்களது கடமை" என்றார். (இ)

## நாடிப் பிறந்தவொளி நம்பிக்கை நத்தாரே!

அக்கிரம ஆட்டங்கள் ஆணவமார் தாக்கங்கள்
உக்கிரம மூற்றகொலை உச்சமுற அச்சமொடு
மக்கள்குலம் மாய்ந்தழியும் மாகொடுமை கண்டிறைவன்
சக்திவந்து தாரணியில் சங்கமித்த நத்தாரே!

சத்தியமும் சித்தநிறைச் சற்குணமும் தாம்பொலிந்து
உத்தமராய் மக்கள்குலம் உண்மையொளி ஏற்றுதற்கே
பெத்தலகி லேமினிலே பெண்மணியாம் கன்னிமரி
முத்தெனவே தேவனுயர் முன்சக்தி வந்ததுவே!

மாடியிலே நல்லவுயர் மஞ்சத்தி லேபிறக்கக்
கூடியதோர் தெய்வக் கொழுந்தாய சக்தியது
வாடைக் குளிரடிக்க மாட்டுத் தொழுவத்தை
நாடிப் பிறந்தவொளி நம்பிக்கை நத்தாரே!

ஏழை எளியாரி ரட்சகனே தாமென்றும்
வாழ வழிகாட்டும் வானவனே தாமென்றும்
மீள வொளியேற்றும் மேலவனே தாமென்றும்
சூழ விழிகூட்டித் தூயசுதன் தோன்றினனே!

பெரிருளை நீக்கப் பிறந்தா னெனுங்குறிப்பைக்
காரிருளே முன்கூட்டிக் காட்டியது காசினியில்
நேரொளிசெய் பாலகனை நெஞ்சார நேசித்துச்
சீரழியா வாழ்வோங்கச் சேவிப்போம் நத்தாரே!

-- அரியாலையூர் வே. ஐயாத்துரை

## சட்ட நடவடிக்கை

(வட்டுக்கோட்டை)
காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தின் முன்னைய நிர்வாகத்தின்போது வழங்கப்பட்ட மூன்று லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட கடன் பாக்கியை அறவிடுவதற்கு திரு. ச. கதிரவேலு தலைமையிலான புதிய இயக்குநர்சபை சகலவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

கடன்களைத்திருப்பிச்செலுத்தாத அங்கத்தவரல்லாத பதின்நான்கு பேர்களுக்கு எதிராக காரைநகர் ப. நோ கூ. சங்கம் வழக்குகள் தாக்கல் செய்துள்ளது.

யாழ்ப்பாணம், மல்லாகம் ஆகிய மாவட்ட நீதிமன்றங்களில் இவ்வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. (ச)

## யாருடையது?

மகாதேவன் என்பவரது ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேற்று அட்டவணை 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளவும்.

## மக்கள் பிணக்குகளைத்தீர்த்து அமைதியை நிலைநாட்ட பரு. இன்ஸ்பெக்டர் ஏற்பாடு

(புலோலி)
பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியிலுள்ள சகல இடங்களிலும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கும் ஒழுங்கையும்அமைதியையும் நிலைநாட்டுவதற்கும் பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. நிஹால் ஜெயசேகரா பொதுமக்களுக்கு இலகுவான பல புதிய முறைகளில் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறார்.

புலோலி கிராமசபை எல்லைக்குள் உள்ள மக்கள் தமக்குள்ள சிறு சச்சரவுகளை அண்மையில் பருத்தித்துறைப் பொலிசாரினல் நியமிக்கப்பட்டுள்ள "ஜாக்கிரதைக் குழு" அங்கத்தவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், தான் குறிப்பிட்ட தினத்தில் அப்பகுதிக்குச் சென்று அச்சிறு சச்சரவுகளைத் தீர்த்துவைக்கவுள்ளதாக இன்ஸ்பெக்டர் நிஹால் ஜெயசேகரா தெரிவித்தார்.

இதற்கிணங்க புலோலி கிழக்குச் சந்தாதோட்டத்திலுள்ள முதலியம்மன் ஆலயத் திருவிழா பற்றிய இருசாரார்களுக்கிடையேயுள்ள பிரச்னைகளை "ஜாக்கிரதைக் குழு"வின் கவனத்திற்குக் கொண்டுவந்ததற்கிணங்க இன்ஸ்பெக்டர் திரு. நிஹால் ஜெயசேகரா, சப்-இன்ஸ்பெக்டர் திரு. நந்தலால் சார்ஜன்ட் திரு. மாணிக்கராசா, ஜாக்கிரதைக்குழு அங்கத்தவர்கள் ஆகியோர் அங்குள்ள வாசிகசாலைக்கு இருசாராரையும் அழைத்து விசாரணைசெய்து அவர்களது பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்த்துவைத்துள்ளனர்.


"புளோறெஸென்ற்" குழாய்கள் வெண்மை (இயற்கை ஒளி)
விசேட அறிமுக விலை 17/- மட்டுமே.

இக் குழாய்கள் "டேலைற்" குழாய்களை விட 58% அதிக துல்லிய பிரகாசத்தை அளிப்பதுடன் அதிக ஒளியையும் குறைந்த வெப்பத்தையும் வெளிப்படுத்துகின்றன. சதுர அடிக்குத் தேவைப்படுவதிலும் குறைந்த குழாய்களை உபயோகித்து மின் பாவனையை மீதப்படுத்த முடிகிறது. தொழிற்சாலைகள், காரியாலயங்கள், வியாபார ஸ்தாபனங்கள் மற்றும் வீடுகளுக்கும் ஒளியேற்ற உன்னதமானவை.

விற்பனையாளர்களுக்கு கழிவு உண்டு
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

ரி. ஏ. ஜே. நூர்பாய் அன் கோ., லிமிட்.

அவுஸ்திரேலியா பில்டிங்,
யோர்க் வீதி,
கொழும்பு - 1.

164, நாலாம் குறுக்குத் தெரு,
புறக்கோட்டை
தொலைபேசி : 27245 - 27236.

## ஈழநாடு நத்தார் சிறப்பு

# கிறிஸ்மஸ் விழாவின்வரலாறு

ஈ. பேக்கர்
தமிழாக்கம்:
எஸ். வனத்தையன்



ஆரம்பகாலக் கிறிஸ்தவர்கள் கொண்டாடிய ஒரே விழா "கர்த்தர் உயிர்த்தல் விழா." கி. பி. 2-ம் நூற்றூண்டில் வாழ்ந்த இரேனியுஸ், தெர்த்தூலியன் என்ற சரித்திராசிரியர்களின் நூல்களில் எந்த இடத்திலும் கிறிஸ்மஸ் விழாவைப்பற்றிய செய்திகள் காணப்படவில்லை. 2-ம் நூற்றூண்டின் இறுதியில் வாழ்ந்த ஒரிஜன் என்பவர் கூறியுள்ளதாவது:- "தங்கள் பிறந்த நாளைக் கொண்டாடப் பாவிகள்மட்டுமே விரும்புவர். புனிதர்கள் வான்வீட்டில் புகுந்த நாளையே-அதாவது வான் உலகில் அவர்கள் பிறந்த நாளையே நாம் கொண்டாடுகிறோம்" இதிலிருந்து நாம் அறிவது யாதெனில் கிறிஸ்துவின் பிறப்பைவிட அவரது உயிர்ப்பும், விண்ணகம் எழுந்ததுமே மிக முக்கிய நிகழ்ச்சிகளாக - விழா மகிழ்ச்சிக்குரிய நாட்களாக - அக்கால மக்கள் மதித்துவந்தனர். தமது கடவுளர்களின் பிறந்த நாட்களைக் கொண்டாடிவந்த பிறமதத்தினரைப் பற்றி எள்ளிநகையாடுகிருர் மற்றொரு எழுத்தாளர். கிறிஸ்மஸ் விழாக் கொண்டாட்டத்தை எகிப்தியர்கள்தான் முதல் முதலாக கி. பி. 200-ல் ஆரம்பித்தனர் ஆனுல் அஃது அப்போது டிசம்பர் திங்களில் கொண்டாடப்படவில்லை, கிறிஸ்து பிறந்து 200 ஆண்டுகள் கழித்து, நீண்ட நாட்களுக்குப் பின் இவ்விழா முதன் முறையாகக் கொண்டாடப்பட்டமையின், கிறிஸ்து பிறப்பின் சரியான காலத்தை நிர்ணயிப்பது மிகவும் கடினமாக இருந்தது. கிறிஸ்து பிறப்பின் சரியான தேதி, மாதம், நாள், வாரம், வருடம் ஆகியவை பற்றி எவராலும் திட்டமாக அறிந்துகொள்ள முடியவில்லை. அலெக்சாண்டிரியா நகர் அர்ச். கிளமென்ட் என்பவர் கிறிஸ்து பிறப்பின் சரியான தேதியை அறிந்தவர்கள் எனக் கருதப்பட்ட மறைநூல் வல்லுநர் சிலரைப்பற்றிப் பேசுகிருர். கிறிஸ்து பிறந்த நாள் மே 20, ஆகஸ்ட் 28, ஏப்ரல் 20 எனப் பல்வேறு மக்களால் பலவிதமாக நம்பப்பட்டது. சுருங்கச் சொல்லின் வருடத்தின் எல்லா மாதங்களுமே கிறிஸ்து பிறப்பின் மாதங்களாகக் கருதப்பட்டன. கிறிஸ்து பிறந்ததாகக் குறிக்கப்படாத மாதமே இல்லையெனலாம்.

மூன்றரசர் விழா, கர்த்தர் பிறப்பின் விழாவுக்கு முன்னர் கொண்டாடப்பட்டது. மூன்றரசர் விழாக் கொண்டாட்டம் மூன்றும் நூற்றூண்டில் மிகவும் பிரபல்யமடைந்து விளங்கியது. ஆரம்பத்தில் ஜனவரி 10-ம் தேதி கொண்டாடப்பட்ட இவ்விழா சில ஆண்டுகளுக்குப்பின் ஜனவரி 6-ம் தேதியில் கொண்டாடப்பட்டது.

[நத்தார்ப் பண்டிகையின் வரலாற்றை இக்கட்டுரை சுருக்கமாக விபரிக்கிறது.]

கி. பி. 327-ம் ஆண்டில் தான் கிறிஸ்மஸ் விழா இன்றுள்ளதுபோல் டிசம்பர் 25-ல் கொண்டாடப்பட்ட செய்தியை முதன் முறையாக நாம் அறிகின்றோம். அவ்வாறு கொண்டாடியநாடு எகிப்து. சைப்ரஸ் நாட்டினர் கிறிஸ்மஸ் விழாவை ஜனவரி 6ல் கொண்டாடினர். 354ம் ஆண்டிற்கான ரோமை நாட்குறிப்பு கிறிஸ்து பிறப்பின் விழாவை டிசம்பர் 25ம் தேதியில் பிரசுரித்து வெளியிட்டது. இதுவே முதல் தடவையாகும். டிசம்பர் 25ல் கர்த்தர் பிறப்பைக் கொண்டாடும் பழக்கம் கப்பதோசியாவிலும், கொன்ஸ்தாந்தி நோபிளிலும் 380ம் ஆண்டில் பரவியது ஆனுல் கொன்ஸ்தாந்தி நகரம் இன்னுட்களுக்குப்பின் இத்தேதியைக்கைவிட்டு, கீழ்த் திசைரீதியினரின்பழக்கத்தைப் பின்பற்றிப் பிற்காலத்தில் ஜனவரி 6ம் தேதியையே கிறிஸ்மஸ் விழாவாகக்கொண்டாட முனைந்தது. இன்று வரையில் அவ்வழக்கமே அவர்களது நடைமுறையில் உள்ளது.

இன்று கிரேக்க பிரிவினையாரும், ருஷிய திருச்சபையாரும் ஜனவரி 6ஐயே கிறிஸ்மஸ் நாளாகக்கொண்டாடுகின்றனர். டிசம்பர் 25ல் கர்த்தர் பிறப்பின் நன்னுளைக் கொண்டாடும் வழக்கம்மேலைநாடெங்கும் பரவி, பின்னர் வேதபோதக நாடுகளிலும் பரவிற்று. கிறிஸ்மஸ் விழாவை டிசம்பர் 25ல் அமைத்தது சரியாக அதேநாளில் கிறிஸ்து பிறந்தார் என்பதற்காக அல்ல- (ஏனெனில் நமக்கு எதுவும் நிச்சயமாகத் தெரியாது) ஆனுல் அதேநாளில் பிறமதத்தினர் சூரியனின் பிறந்தநாளைக் கொண்டாடியதே முக்கிய காரணம். ஞான சூரியனுகிய கிஸ்துவின் பிறப்பை அதேநாளில் கொண்டாடுவது மிகவும் பொருத்தமானதுதானே!

"சூரியன் பிறந்த அதே நாளில் தான் கிறிஸ்துநாதரும் பிறந்திருக்கவேண்டும்" என அர்ச். சிப்பிரியன் கூறுகின்ருர். அர்ச். கிறிஸ்தோஸ்தோம் அருளப்பர் கூறுவதாவது: "டிசம்பர் 25ல் நாம் சூரியனின் பிறப்பின் விழாவைக் கொண்டாடுகின்ரேம். ஆம். ஆனுல் அதேசமயம் நீதிச் சூரியனுகிய கிறிஸ்துவின் பிறப்பையும் கொண்டாடுகிரேம்." இச்சரித்திரத் தொடர்பை நாம் நினைவுபடுத்திக்கொள்வோம். நமக்குக் கிறிஸ்துநாதரே சூரியன்போன்றவர். அவரே நமது ஒளி. அவரே நமது தீப அலங்காரத் தீபாவளி.

(நன்றி 'தோழன்')

# நத்தா

பகைமை நிறை இவ்வுலகில்-
பொய் புரட்டு மலிந்த இப் பூமியில்-
பணத்துக்கு முன் மண்டியிடும் இம்மண்ணுலகில்-
கிறிஸ்துவே நம ஒரே நம்பிக்கை!
மாபெரும் செய்தி யாதெனில்;
இறைவனே நம்முடன் பேசுகிருர்.
தம் திருமகன் கிறிஸ்து வழியாக
கிறிஸ்து பிறந்தநாள் விழாவை இவ்வுலகில் நாம் கொண்டாடுகிரேம்
கிறிஸ்து இவ்வுலகுக்கு ஒரு செய்தி கொண்டுவந்தார்,
"உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமையுண்டாகுக.

## ஏற்றித் தொழுதிட வாரீரோ

அன்னை மேரி மடியினிலே சின்னஞ்சிறு பாலகனுய்
அண்ணல் இயேசு தூங்குகின்ருன் தாலேலோ
அவன் ஆநிரைகள் மத்தியிலே அவதரித்த
விந்தையிலே
கண்ணை மூடித்தூங்குகின்ருன் ஆராரோ.

வானுலகம் போற்றிடவும் தாரகைகள் சிரித்திடவும்
இத்தாரணியில் வந்துதித்தான் தாலேலோ
அவன் பாவிகளை மீட்கவென்று பரலோகம்
விட்டுவந்து
பாடுகளும் பட்டுவிட்டான் ஆராரோ.

ஏரோது மன்னவனும் ஏங்கியே தானிருக்க
எந்தையேசு மந்தையுடன் தானிருந்தான்
என்னி நடைபோட்டும் அங்கே துள்ளி
எழுந்தமன்னன்,
ஏக்கமுடன் ஏமாந்தான் ஆராரோ.

எங்கள் இயேசு பாலகனை ஏற்றித் தொழுதிடுவோம்
தங்கையரே தாய்மாரே வாரீரோ
உன்னதமானவனே ஓசன்னுப்பாடி நாமும்
உயர்த்தி வணங்கிடுவோம் வாரீரோ.

மங்களகீதம் பாடி மரியம்மை பாலகனை
வாழ்த்தி வணங்கிடுவோம் வாரீரோ
மன்னுயிர்க்காகத் தன் இன்னுயிர் ஈந்த எங்கள்
தேவாதி தேவனை வாழ்த்திடுவோம்.

-- க. தங்கம்.


எமது வாடிக்கையாளர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும்
நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்
செல்லம்ஸ்
(படம் பிடிப்பவர்கள்)
94, 96 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
போன்: 436

அனைவர்க்கும் எமது அன்புகலந்த
நத்தார் -- புத்தாண்டு
வாழ்த்துக்கள்!
நீடித்த உழைப்பும் நிறைந்த பயனும்மிக்க
புகழ்பெற்ற
றேடியோக்கள்
புதிய குறைந்த விலைகளில்
விற்கின்றேம் என்பதை
மறவாதீர்கள்
எஸ். சுலைமான்கண்டு
அன் பிறதர்
5, 7, ஸ்ரான்லிவிதி - யாழ்ப்பாணம்.

அனைவர்க்கும் அன்புகலந்த
நத்தார்-புதுவருட நல்வாழ்த்துக்கள்!
★ கடர்ச்சியான இழை
★ சொகுசான ஓட்டம்
★ நீடிய பாவனை
★ உத்தரவாதமுள்ள வேலைப்பாடு
ஆகியவற்றுக்கு உங்கள் தேய்ந்துபோன டயர்களை
எம்மிடம் புதுப்பியுங்கள்
நோர்தேண் இன்டஸ்றீஸ்
112 ஸ்ரான்லி றேட், (போன்: 7158) யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் அன்பு கலந்த
நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்!
அபிஷேகச் சாமான்கள்
அத்திபாரச் சாமான்கள்
விவாக முகூர்த்தப் பொருட்கள்
மற்றும்
கோவில் தேவைகளுக்கான
சகல
மருந்துச் சாமான்களும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
க. செ. கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்
(மருந்துச் சரக்கு வியாபாரம்)
76, பெரியகடை ... யாழ்ப்பாணம்
போன்: 7135

புமலர்

# தாரின் நற்செய்தி

உலகிலே அவர் தயவு பெற்றவர்க்கு அமைதி ஆகுக.''

இச்செய்தி இறைவனின் செய்தி; அன்பின் தூது

இச்செய்தி ஒன்றே இவ்வுலகைச் செம்மைப்படுத்தக்கூடும்.

இதைக் கருத்திற் கொள்ளாதுவிட ஒருவராலும் முடியாது.

நீ இதை அறிந்துகொள்ள வேண்டும்.

இச்செய்தியின்படி வாழ்ந்து அதை உனதாக்கவேண்டும்.

ஏனெனில், இச்செய்தியைக் கொணர்ந்தவர் கிறிஸ்து.

கிறிஸ்து இறைவனின் வார்த்தையானவர்.

அதனுல் தான் அதற்கு நாம் செவி சாய்க்கவேண்டும்.

கிறிஸ்துவே நம் ஒளி!

அவரே நம் இருளைப் போக்க வல்லவர்.

கிறிஸ்துவே நம் உண்மை!

அவர் தவறவும்மாட்டார்; பிறரைத் தவறச்செய்யவும் மாட்டார்.

## - இ. மரியவளன் -

கிறிஸ்துவே நம் உயிர்!

நம் ஆன்ம உயிர் உடலின் உயிரினும் மேலானது கிறிஸ்துவே நமது பலமும் தஞ்சமும்!

''சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன்''

கிறிஸ்துவே சமுதாயத்தின் மூலைக்கல்,

அவரின் அன்பின் ஆணையைப் புறக்கணிக்கும் சமுதாயம் அழிந்தேபோகும்.

இதைப்படிக்கும் நீ ஓர் கிறிஸ்தவன் அல்லாவிடில்,

கிறிஸ்துவின் அருள் உன்னை அருட்டவிடு; அதற்கு நீ கிறிஸ்துவின் சுவிசேஷங்களைப் படி,

ஒரு குருவுடனே அல்லது கிறிஸ்தவ நண்பனுடனே கலந்துரையாடத் தயங்காதே.

இதைப்படிக்கும் நீ ஏற்கனவே ஓர் கிறிஸ்தவனுக இருந்தால் இக் கிறிஸ்மஸ் விழாவின் சந்தர்ப்பத்தில்,

உன் வாழ்க்கையைத் திருத்திக்கொள். உன் அன்ருட வாழ்க்கையில் இனிமேல் கிறிஸ்துவைப் பின்பற்றி நடக்கத் தீர்மானஞ் செய்துகொள்.

கிறிஸ்து உலக ஈடேற்றத்தில் உன்னையும் ஓர் பங்காளி ஆக்கியிருக்கிருர்.

மறந்துபோகாதே[

இறை அரசைப்பரவச்செய்யும் பொறுப்பு உன்னையும் சார்ந்ததே.

இதைச் சிந்தித்துப் பார்.

இதன்பொருட்டு உன் முன் மாதிரிகையாலும், அறிவுரைகளினுலும், செபங்களினுலும், நீ ஒரு திருத்தொண்டன் ஆகவேண்டும். தயங்காதே;

நீ சந்திப்பவருடன் கிறிஸ்துவைப்பற்றி உரையாடு.

யாவருக்கும் இந்த நற்செய்தியை எடுத்து உரைப்பது உன் கடமைt

நீ யாராயிருந்தாலும் மகிழ்ச்சி கொள்!

ஏனெனில், உனக்கு ஒரு மீட்பர் பிறந்துள்ளார்.

(ஆங்கிலத்தழுவல்)

ஒருவரும் என்னை அன்பு செய்யவில்லை. எனக்காகக் கவலைப்படுவோர் யாருமில்லை என்பதைப் போல், ஒரு மனிதப் பிறவியை வாட்டி வதைக்கக்கூடிய எண்ணம் வேறொன்றுமில்லை.

-- அன்னை திரேசா

## மணி மொழிகள்

மனிதர்களே, நீங்கள் சகோதரர்களாக இருக்கிறீர்கள். ஒருவருக்கொருவர் ஏன் தீங்கு செய்துகொள்ளுகிறீர்கள்?

—நடபடி 7 : 26

0 0 0

அயலவனை முகஸ்துதி செய்பவன் அவனுடைய கால்களுக்கு வலைவிரிக்கிருன்:

—நீதிமொழி 29 : 5

0 0 0

தாழ்த்தப்பட்டவர்கள் கூக்குரலைக் கடவுள் மறப்பதில்லை.

— சங்கீதம் 9 : 12

0 0 0

அன்னமும் ஆடையும் இருந்தால் அதுவே போதுமென்ற மனத்திருப்தி அடைவோமாக.

—1 தீமோத்தேயு 6:8

0 0 0

இந்த ஜனங்கள் தங்கள் வாயுடன் என்னை அணுகுகிருர்கள். தங்கள் உதடுகளால் துதித்திருக்கிருர்கள். ஆனுல் அவர்களின் இருதயமோ எனக்கு வெகு தூரத்தில் இருக்கிறது. — மத்தேயு 15: 8

0 0 0

தீமையைச் செய்து துன்புறுவதைவிட நன்மையைச் செய்து துன்புறுவது மேல்.

—1 இராயப்பர் 3: 7

0 0 0

ஒவ்வொருவனும் காது கொடுத்துக் கேட்பதில் துரிதமாகவும் பேசுவதில் மெதுவாகவும், கோபம் கொள்வதில் தாமதமாகவும் இருப்பானுக. —இயாகப்பர் 1: 19

0 0 0

உறக்கத்தை விரும்பாதே. விரும்பினுல் வறுமையடைவாய். கண்விழித்திரு; திருப்தியான அளவு உணவு பெறுவாய்,

—நீதிமொழி 20: 13

0 0 0

புருஷர்கள் தங்கள் உடலைப் போலத்தங்கள் மனைவியரைக் காதலிக்கட்டும். தன் மனைவியைக்காதலிக்கிறவன் தன்னையே காதலிக்கிருன்.

—எபேசியர் 5: 28

## பால யேசுவுக்கு செபம்

அதி அன்பான யேசுவே, உமது பாலியப் பருவத்திலே நசரேத்து ஊரில் பெற்ருேருக்கு மரியாதையையும், பெரியோருக்குச் சங்கையையும், முறையான அதிகாரிகளுக்கு மனதார்ந்த அமைச்சலையும் உத்தமமாதிரியாகக் காட்டினீரே! நானும் இவைகளிலும் மற்றப் புண்ணியங்களிலும் தேவரீரை ஆவலாய்ப் பின்பற்றி, பராயத்தில் நான் வளரும் போது, அருளிலும் உமது நேசத்திலும் அனுக்கிரகம் செய்ய வேண்டுமென்று அன்பான யேசுவே, உம்மைத் தாழ்மையாய் மன்ருடுகிறேன். சதாகாலம் சீவியராய் இராச்சிய பரிபாலனஞ் செய்கிறவரே, ஆமென்.

(300 நாட்பலன்—XI-ம் பத்திநாதர்)

அனைவர்க்கும் எமது அன்புகலந்த
நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்
இத்திருநாளில் உங்கள் இதயம் கவர்ந்த தங்க, வைர நகைகளைத் தெரிவுசெய்ய மறவாதீர்கள்
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகைவியாபாரம்
119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7199 தந்தி: 'வைரம்'

அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
எமது இதயங்கனிந்த
நத்தார் - புத்தாண்டு
வாழ்த்துக்கள் உரித்தாகுக!
றேடியோமனுயல்
23/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நிதான விலை! நம்பிக்கை!
பலவருடகாலமாக எமக்கு ஆதரவு தந்து ஊக்குவித்த அன்பர்களுக்கும்
வாடிக்கையாளர்களுக்கும் எமது மனப்பூர்வமான
நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்
உரித்தாகுக
கமலா ஸ்ரோர்ஸ்
123, பாங்ஷால் வீதி — யாழ்ப்பாணம்.
போன்: 7148
கிளை:
கவுரி போறேஜ் ஸ்ரோர்ஸ்
5, நியூமார்க்கட் — ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

RICOH
இன்றே
விஜயம் செய்யுங்கள்!
அன்பளிப்புச் செய்யக்கூடிய இறக்குமதி செய்யப்பட்ட
பிஸ்கட் சொக்கலட்
சுவிங்கம் பபிள்கம்
முதலியவற்றுக்கும் மற்றும்
கேக் வகைகள் - பொம்பே சுவீட்ஸ் - தேன் சிந்தும் பூந்தி
மஸ்கட் - ஐஸ்கிறீம் வகைகள் - கோழிப்பிரியாணி
மட்டன் ரோல்ஸ் - பற்றிஸ் - கட்லட்ஸ்
முதலியவற்றுக்கும் றிக்கோ...
★ பிறந்ததினம் ★ திருமணம்
ஆகிய வைபவங்களுக்கான சிறந்த
றிச்கேக் - பட்டர் கேக் வகைகளை ஆர்டர் கொடுத்து
'ஐஸிங்'செய்து பெற்றுக்கொள்ளலாம்.
றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் ஹவுஸ்,
370, ஆஸ்பத்திரி வீதி, (போன்: 464 - 7889) யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்
அழகிய பவுண் நகைகள்
தங்கப்பவுண் வைரங்கள்
கே. என். எம்.
மீரான் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
நகைவியாபாரம்
கன்னுதிட்டி -- யாழ்ப்பாணம்
போன்: 585

# "தொழிலாளி - தொழிலதிபர்: அரசின்நிலை ஒன்றுதான்"

## முதல்வர் எம். ஜி. ஆர். அறிவிப்பு

சென்னை, டிச. 24
'தொழிலாளர்களானாலும் சரி, தொழிலதிபர்களானாலும் சரி தமிழ்நாடு அரசிடம்இருவேறுபட்ட கருத்துக்கள் கிடையாது. இந்த இரு சாராரிடத்தும் அரசு ஒரே கருத்துடனேயே நடந்து வருகிறது.''

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு,எம். ஜி. இராமச்சந்திரன் கூறினார்.

சென்னை ஷெரீப்பாக திரு. அனந்தகிருஷ்ணன் நியமிக்கப் பட்டதையொட்டி நடத்தப் பட்ட மாநாட்டு விழாவுக்குத் தலைமைவகித்து உரையாற்றுகையிலேயே திரு. எம். ஜி. ஆர். இதனை வலியுறுத்திக் கூறினார்.

''எந்தப் பிரச்னையானாலும் அரசு தன்னாலியன்றவரை அக்கறை எடுத்துத் தீர்த்துவைக்கும்'' என்றும் முதலமைச்சர் உறுதியளித்தார்.

திரு.அனந்தகிருஷ்ணன் நியமனத்தால், ஷெரீப் பதவி பெருமையடைகிறது என்றார் அவர், [உ]

# எம்.ஜி.ஆர்., தேவராஜ்அர்ஸ் சென்னையில் சந்திப்பு

சென்னை, டிச. 24
தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனும், கர்நாடக முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்ஸும் நேற்றுச் சென்னையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இச்சந்திப்பு 10 நிமிடங்கள் வரை நீடித்தது.

''நண்பர்களின் சந்திப்பே இது'' என்று பின்னர் கர்நாடக முதலமைச்சர் திரு. அர்ஸ் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார். (உ

## கடற்றொழில் அபிவிருத்திச்சபை

(கொக்குவில்)
யாழ். மாவட்ட கடல் தொழில் அபிவிருத்திச் சபைக் கூட்டம் யாழ் கச்சேரியில் யாழ், அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் பின்வருவோர் ஊக்கினர் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்!

தலைவர்! எஸ் தர்மபாலன் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் நிர்வாகம் செயலாளர்: எஸ் இறீஸ்கந்தராஜா மாவட்ட கடல்தொழில் அதிகாரி. எட்டுப்பேர் கொண்ட உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளர். [உ]

## கேந்திர ஆயுதக்கட்டுப்பாடு:

# 'தீராதபிரச்னைகள் தீரும்நிலை

## அமெரிக்கா, ரஷ்யா அறிக்கை

வாஷிங்டன், டிச 24
புதிய கேந்திரஆயுதக் கட்டுப்பாடு தொடர்பாக அமெரிக்காவுக்கும்,சோவியத்யூனியனுக்குமிடையே இதுவரை தீர்க்கப்படாது இருந்துவரும் சில பிரச்னைகளைச் சுமூகமாகத் தீர்த்துக்கொள்ளும் நிலை உருவாகியுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இச்செய்தியை இரு நாடுகளும் நேற்றிரவு ஊர்ஜிதம் செய்தன.

அமெரிக்க அதிபர் திரு ஜிம்மி கார்ட்டரும், சோவியத் அதிபர் திரு. பிரஸ்னேவும் சந்தித்து இது விடயம் தொடர்பாக மேலும் பேச்சுவார்த்தை நடத்தும் வகையில் உச்சி மாநாடு ஒன்று நடத்தப்படக் கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## பன்னவேலைப் பயிற்சி

[சுழிபுரம்]
பண்ணாகம் தெற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தினர், அரசாங்கத்தின் உதவியுடன் பன்னவேலைப் பயிற்சியை ஆரம்பிக்கவுள்ளனர்.

இவ்வேலையில் ஈடுபட விரும்பும் ஆண், பெண் இரு பாலாருக்கும் பயிற்சிக் காலத்தில் ஊதியம் கிடைக்கும் வாய்ப்புக்கள் உள்ளதாகச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவின் திட்டத்திற்கமைய ஆரம்பிக்கப்படும் தொழில் நிலையங்களுள் இதுவும் ஒன்றாகும். பயிற்சி எதிர்வரும் தைமாதம் ஆரம்பமாகும். [உ[

# மூன்றுமாதக்கர்ப்பிணி சுருக்கிட்டுத் தற்கொலை

[முல்லைத்தீவு]
யுதுக்குடியிருப்பு கல்விளாங் கண்டல் என்னும் இடத்தில் மூன்று மாதக் கர்ப்பிணியான ஜெயராசா சரோஜினிதேவி என்னும் பெண் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்!

இவரது மரணவிசாரணையை முள்ளியவளை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. கே. தியாகராசா நடத்தினார். இறந்தபெண்ணின் கணவர் சூசைதாசன் ஜெயராசா சாட்சியமளிக்கையில், 'இருவரும் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைச் சேர்ந்தவர்களென்றும், சம்பவம் நடந்த அன்று, தனது மகனுக்கு அடித்ததால் மனைவி கோபமுற்றுத் தன்னுடன் வாக்குவாதம் செய்தாரென்றும், அதனால் தான் கையாலும், தடியாலும் அடித்ததாகவும் கூறினார். இரவு படுத்து, ஒன்பதரை மணி போல் பார்த்தபோது, மனைவி நைலெக்ஸ் சேலையால் கழுத்தில் சுருக்கிட்டுத் தொங்கிய நிலையில் இறந்து காணப்பட்டார்'' என்றார்.

போதிய சாட்சியங்கள் இல்லாமையால் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டு முல்லைத்திவு மாவட்ட வைத்திய அதிகாரி ஜி. லங்கநாராயணன் பிரேதபரிசோதனையை நடத்தி இறந்தவர் மூன்று மாதக் கர்ப்பிணியென்றும் கழுத்தில் சுருக்கிட்டு தூங்கியே தற்கொலைசெய்துள்ளார் என்றும் கூறினார். சாட்சியங்களை திரு. டி. ஜி. எ. பெர்னாண்டோ ஆஜர்செய்தார்.

பிரேதத்தைச் சுண்டுக்குழியில் அடக்கம் செய்யப்போவதாக கணவரான ஜெயராசா கேட்டுக் கொண்டதற்கிணங்க மரண்விசாரணை அதிகாரி அனுமதியளித்தார்.

## "இலங்கை-மலேஷிய கலைத் தொடர்பு"

ஈப்போ டிச. 24
''இலங்கையிலுள்ள இவர் போன்ற கலைஞர்கள் அடிக்கடி வந்து இசைக் கச்சேரி செய்து கர்நாடக இசையின் மகத்துவத்தை எடுத்து வழங்குவதால் மலேஷியாவுக்கும் இலங்கைக்குமிடையே நெருங்கிய நட்புறவும் கலைத் தொடர்பும் தொடர்ந்து நீடிக்க வழி பிறக்கிறது.''

ஒரு உயர்தரமான கர்நாடக இசையமுதத்தை நாம் இன்று அனுபவித்தோம் ''

மலேஷியாவில் நடந்த சாவகச்சேரி மாவட்ட நீதிபதியின் பாரியார் இசைவாணி திருமதி லக்குமிதேவி பாலகிட்ணரின் கர்நாடக இசைவிருந்திற்குத் தலைமை தாங்கிய டாக்டோ செனற்றர் டாக்டர் சின்னத்துரை மேற்கண்டவாறு கூறினார்.

ஈப்போவில் மலாயன் சிலோன் காங்கிரஸ் சார்பில் ஈப்போ நூல் நிலைய அரங்கில் இக்கச்சேரி நடைபெற்றது.

திரு. சி. பாலகிட்ணரும் பாரியாரும் சுமார் இரண்டரை மாத காலம் மலாயா, சிங்கப்பூர், கோலாலம்பூர் முதலிய நாடுகட்கு சுற்றுப்பிரயாணம் செய்தபோது கோலாலம்பூர், மலாக்கா முதலிய பல இடங்களில் அநேக கச்சேரியை திருமதி லக்குமிதேவி செய்து பொதுமக்களின் பாராட்டைப் பெற்றார். (க)

# தமிழகத்திற்கு கேரளம் மின்சாரம் வழங்கும்

## முதல்வர் அர்ஸ் தகவல்

பெங்களூர், டிச. 24
தமிழ்நாட்டுக்கு, கேரள அரசு 120 கோடி யுனிட் மின்சாரம் வழங்கவிருக்கிறது.

இத்தகவலைக் கர்நாடக முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்ஸ் வெளியிட்டார்,

அடுத்த ஆண்டு ஜூன் மாதம் 30ந் திகதி வரை இந்த மின்சார விநியோகம் நடைபெறுமென்று அவர் சொன்னார்

புதிய ஒப்பந்தம் குறித்து இரு மாநில அதிகாரிகளும் சென்னையில் அடுத்த மாதம் 28ந் திகதி சந்தித்துப் பேச்சுவார்த்தைநடத்துவார்களென்றும் அவர் கூறினார். (உ)

## ஐவருக்கு வாள் வெட்டு

(பண்டத்தரிப்பு)
இரு இளம் பெண்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் பலத்த வாள்வெட்டுக் காயங்களுடன் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அச்செழுவைச் சேர்ந்த சங்கரன், நாகமுத்து, இராஜன், தங்கேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரே இவ்வாறு வாள் வெட்டுக் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

சுமார் 25 பேர்கொண்ட கோஷ்டியொன்று இவர்களின் வீடு தேடிவந்து வாளினால் வெட்டியதாகக் கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான சந்தேக நபர்களை கோப்பாய் பொலிசார் தேடிவருகின்றனர்.

### சரண்சிங்

# நீண்ட ஆயுள்பெற ஜெயப்பிரகாஷ் வாழ்த்து

புதுடில்லி, டிச. 24
''இந்திய நாட்டுக்கு மேலும் பல தொண்டுகள், சேவைகள் செய்ய நீண்ட ஆயுளுடன் வாழ்க''

மேற்கண்டவாறு திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண், முன்னாள் உள்துறை அமைச்சர் திரு.சரண்சிங்கின் 77வது பிறந்தநாள் விழாவையொட்டி அவருக்கு அனுப்பியுள்ள வாழ்த்துத் தந்தியில் தெரிவித்துள்ளார். (இ)

எமது இனிய நத்தார் - புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்




இது உங்கள் நிறுவனம்

சி. சின்னத்துரை அன் பிறதர்

39, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.
தந்தி: கல்கி, போன்: 284

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இதயம் கலந்த

நத்தார் - புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

வடபகுதியில் பல பொருட்களுக்கு
நாமே இறக்குமதியாளர்கள்

- பல்கன் பால்ரின்
- ரெட்காட் ஸ்திரிகைப்பெட்டி
- பெட்ரோல்மாக்ஸ்
- அரிக்கன் லாம்புகள்
- சுடுநீர்ப் போத்தல்கள் இன்னும் பல

மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு

முஹமதலி அப்துலலி

5 & 7, பெரியகடை, போன்: 515 யாழ்ப்பாணம்.

# "அரியாலை மின்தறி ஆலை மூடப்பட்டது

# இளைஞர், யுவதிகள் மறியலின் எதிரொலி

## நுகர்ச்சி, விவசாயப் பகுதிகள் மூடப்பட்டதால் பாவனையாளரும் விவசாயிகளும் பாதிப்பு

(நாயன்மார்கட்டு)

அரியாலையிலுள்ள யாழ். மாநகர ப நோ கூ. சங்க மின்தறிஆலைக்கு முன்னால், அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்களும், யுவதிகளும் சுலோக அட்டைகளுடன் அமர்ந்து மறியலுடன் ஆர்ப்பாட்டம் செய்ததை தொடர்ந்து மின்தறி ஆலைமூடப்பட்டுள்ளதுஇதனுடன் சேர்ந்த அரியாலை கிளை நுகர்ச்சிப் பகுதியும் விவசாயப் பகுதியும் மூடப்பட்டுள்ளது.

அரியாலையிலுள்ள மின் ஆலையில் இதுவரை 16 மணித்தியாலங்களாக இரு 'சிவ்ற்' முறை இயங்கிவந்தது. இதனை 3 சிவ்ற் முறையாக மாற்றுவதற்கு யாழ். மாநகர ப நோ. கூ. ச. நெறியாளர் குழு தீர்மானித்தது. மூன்றுவது சிவ்ற்றுக்கு கொழும்புத்துறை, அரியாலை, நாயன்மார்கட்டைச் சேர்ந்த இளைஞர்களுக்கும், யுவதிகளுக்குமே வேலை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அப்பகுதி இளைஞர்களும், யுவதிகளும் மறியல் ஆர்ப்பாட்டம் செய்தனர் எனக் கூறப்படுகிறது.

அரியாலையில் அமைந்திருக்கும் மின்தறி ஆலை, முன்னர் அரியாலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தனியாக இயங்கிய காலத்தில் அதன் லாபப் பணத்தில் மின்தறி இயந்திரங்கள் வாங்கப்பட்டதாகவும் பின்னர் அரியாலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன் அரசு இணைத்ததாகவும் இளைஞர்கள் தெரிவித்தனர்.

அரியாலை ப. நோ. கூ. சங்கத்தின் சொந்தக் கட்டிடத்திலேயே மின்தறி நிலையம் அமைக்கப்பட்டதோடு, அக்கட்டடத்திலேயே நுகர்ச்சிப் பிரிவும், விவசாய பிரிவும் அமைக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மின்தறி ஆலையில் மூன்றுவது 'சிப்ற்'றுக்கு ஊழியர்களை அப்பகுதியிலிருந்தே எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேசமயம் யாழ். மாநகர ப. நோ. கூ. சங்கத்தில் 11 கிளைகள் மூடப்பட்டுள்ளதால் அக்கிளைகளில் வேலைசெய்த மனேஜர்களையும் விற்பனையாளர்களையும், அரியாலை மின்தறி நிலைய மூன்றுவது சிப்றுக்கு நியமிக்குமாறு ஊழியர்கள், நெறியாளர் குழுவைக் கோரியுள்ளனர்.

அரியாலையிலுள்ள ப. நோ. கூ. சங்கக்கிளையும், விவசாய பகுதியும் மூடப்பட்டதால், அப்பகுதிப் பாவனையாளர்களும், விவசாயிகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அப்பகுதி மக்கள், பங்கீட்டரிசி மற்றும் பாவனைப பொருட்கள் பெறுவதற்கு பெரிதும் சிரமபபட்டு வருகின்றனர். நெற்பயிர்களுக்கு வேண்டியஉரவகைகளும் கிருமிநாசினி வகைகளும் பெறமுடியாமல் அப்பகுதி விவசாயிகள் கஷ்டப்பட்டுவருகின்றனர். [க]

## வழக்கம்பரை முத்துமாரியம்மன் பூசை

(சுழிபுரம்)

வழக்கம்பரை மகாமாரியம்மன்கோயிலில் மார்சழி மாத உதயப்பூசை அதிகாலை 5 மணிக்குத் தினமும் சென்ற வெள்ளிக்கிழமை முதல் நடைபெற்றுவருகிறது. வருடாவருடம் விசேடமாக நாதஸ்வர வித்துவான் ச. நடராசபாகவதர் கோஷ்டியினர் நாதஸ்வரம் வாசித்துவருகின்றனர். (உ)

## பலா, ஈரப்பலா கன்றுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மில்க்வைற் ஸ்தாபனத்தினர் பலாக் கன்றுகளையும் ஈரப்பலாக்கன்றுகளையும் தேக்கு மற்றும் கருவேப்பிலைக் கன்றுகளையும் இன்றுதொடக்கம் தமது தொழிலகத்தில் இலவசமாக விநியோகிக்கின்றனர். இக்கன்றுகளைப்பெற்று உற்பத்திசெய்ய விரும்புபவர்கள்மட்டும் நேரில்வந்து தம்மிடம் அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் திரு. க. கனகராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### சூறாவளிப் பகுதியில்

# நெல் மூடைகள் கைப்பற்றப்பட்டன

(மட்டக்களப்பு)

சூறாவளியினால்சேதமடைந்த வவுணதீவில்உள்ள நெற் சந்தைப்படுத்தற் களஞ்சியத்திலிருந்து அகதிகளால் எடுத்துச்செல்லப்பட்டதாகக் கூறப்படும் நெல்மூடைகளைவியாழக்கிழமை பொலிசார் மீட்டுள்ளார்கள்.

அதிகதிகளாக்கப்பட்டுள்ள விவசாயிகள் பலரும் தமது உணவுக்கென வைத்திருந்த நெல் மூடைகளையும் பொலிசார் கைப்பற்றினார்கள்.

வவுணதீவு, குறிஞ்சாமுனை போன்ற இடங்களில் வீடுவீடாகச் சென்று சோதனையிட்டபொலிசார் நூற்றுக்கணக்கான நெல்மூடைகளை மீட்டனர்.

குறிஞ்சாமுனைக் காளி அம்மன் கோயிலில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான மூடைகளும் கைப்பற்றப்பட்டன. (க)

## ரயில் நிலைய கூரையின் அவல நிலை

(கோண்டாவில்)

கோண்டாவில் புகையிரத நிலையத்தின் மேடையின் மேற்கூரையில் சில தகரங்கள் காற்றுக்கு பலத்த ஓசையெழுப்பி கழன்று விழும் நிலையில் உள்ளன.

புகையிரத நிலையத்தின் வடபக்கத்தில் மலசலகூடத்திற்கு அண்மையில் காணப்படும் கூரையும் இந்நிலையிலேயே காணப்படுகின்றது.

பொதுவாக புகையிரத நிலையத்திற்குவருகின்ற பிரயாணிகளும், வழியனுப்புவோரும் காற்று வீசினால் உடனடியாக கூரையின் மேற்பகுதியையே கிலியுடன் பார்க்கின்றார்கள். (உ)

## பயிற்சி வகுப்புகள்

(உடுப்பிட்டி)

யாழ். கூட்டுறவுக்கல்லூரியில் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரப்பயிற்சி நெறிக்கான (சாதாரணபிரிவு) வகுப்புக்கள் ஜனவரி மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளதாக யாழ். கூட்டுறவுக் கல்லூரி அறிவித்துள்ளது. [க]

## இருவர் நியமனம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சித் தொகுதியில் இரண்டு புதிய மரணவிசாரணை அதிகாரிகள் நியமனம் பெற்றுள்ளார்கள். கரைச்சிப் பிரிவிற்கு திரு. இ. பெ. பரராசசேகரம், முழங்காவில் பகுதிக்கு திரு. சு. பாலச்சந்திரமூர்த்தியும் நியமனம் பெற்று சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்கள். [இ—

## கருத்தரங்கு

(புலோலி)

வடபகுதியில் உள்ள நூலகர்களின் நன்மை கருதி, நூலகர்களுக்கான கருத்தரங்கொன்று ஜனவரி மாதம் 6 ம் திகதி யாழ். பொதுசன நூல் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை நூலகர் சேவைகள் சபையின் உதவிப் பணிப்பாளர் ஜனாப். எஸ். எம். ஜமாலுதீன் யாழ். வளாகம் நூலகர் திரு. ஆர். தம்பையா, யாழ் பல் தொழில் நுட்பக் கல்லூரியின் நூலக விரிவுரையாளரும் முன்னாள் வணிகத் துறைத் தலைவருமாகிய திரு வே இ பாக்கியநாதன் ஆகியோர் இக்கருத்தரங்கில் உரையாற்றுவார்கள் (க)

## ஐவருக்கு இடமாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அஞ்சல் அலுவலகத்தில் இருந்து ஐந்துபேர் இடமாற்றலாகிச் செல்கின்றனர். திரு இ கிருபாலன், சி இராஜேஸ்வரன் ஆகியோர் அஞ்சல் அதிபர் பயிற்சிப்பாடசாலைக்கும், திரு முத்துக்குமாரசாமி வாழைச்சேனைக்கும். திரு கிருஷ்ணபிள்ளை திரு கோணமலைக்கும் திரு தியாகராசா சாவகச்சேரிக்கும் மாற்றலாகிச் செல்கின்றனர். (க)


சினிமா ரசிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்
தினசரி 4 காட்சிகள்
ராணி (யாழ். நகர்)
எம். ஜி. ஆர். - ராதா சலூஜா நடித்த
இதயக்கனி (புதியபிரதி)

சினிமா ரசிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டுவாழ்த்துக்கள்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
லலிதா

லிடோ (யாழ். நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
நீதி தேவன்

சினிமா ரசிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டுவாழ்த்துக்கள்
மனோகரா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த் சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

சினிமா ரசிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்
ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி நடித்த
முத்துமண்டபம் (புதியபிரதி)

சினிமா ரசிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்
REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p m.
JACK IN THE BOX
(Color — Sex — Comedy)

சினிமா ரசிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்
வெற்றிமுழக்கமிடும் 5 வது நத்தார் வாரம்!
சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 4 காட்சிகள்
10-30, 4-30, 7-00, 9-30
இன்னும் சில தினங்கள் மட்டும் — Last Few Days
LEE VAN CLEEF... LO LIEH...
BLOOD MONEY (Scope - Color)

சினிமா ரசிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்
வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466
தினசரி 4 காட்சிகள்
கலைமாமணி சிவாஜிகணேசன், மாலினி பொன்சேகா
ஈழத்து நடிகர்கள்
விஜயேந்திரன், விஜயதீபன்
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

சினிமா ரசிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்
ஸ்ரீதர் (யாழ்நகர்)
தினசரி காலை 10-30, பி.ப. 2-30, 6-30, 9-45
இதுவரை பார்த்தவர்கள் அனைவரதும் பாராட்டலுக்குரிய புதுமை மிகுந்த காவியம்.
கமலஹாசன் - சுஜாதா மற்றும் பலர் நடித்த
உயர்ந்தவர்கள்
இறைவன் இரண்டு பொம்மைகள் செய்தான் தான் விளையாட...
உயர்ந்தவர்கள் உள்ளத்திலும்...
ராமகிருஷ்ணா கிருஷ்ணா...
போன்ற இனிய பாடல்கள் நிறைந்த படம்

சினிமா ரசிகர்கள், அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்
Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
FATHER! DEAR FATHER!!
(Comedy)
Also Latest Cyclone News

சினிமா ரசிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்
நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெமினி - பத்மினி
அன்னைவேளாங்கண்ணி
(கலர்)

சினிமா ரசிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவகுமார் - சுஜாதா
அன்னக்கிளி

"தமிழ்பேசும் இ. போ. ச. நடத்துனருக்கு

# சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்கு அளிக்குக

## நீதி அமைச்சரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிங்கள தேர்ச்சியிலிருந்து தமிழ் பேசும் இ. போ. ச. நடத்துனர்களுக்கு விதிவிலக்கு அளிக்கும்படி கோரி நீதியமைச்சர் திரு. தேவநாயகத்துக்கு கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபையின் பாதிக்கப்பட்ட நடத்துனர் சார்பில் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

நீதியமைச்சருக்கு அனுப்பப்பட்ட அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது! "வடக்கு கிழக்குப் பிராந்தியங்களில் 12 சாலைகளில் கடமையாற்றுகின்ற நடத்துனர்கள் அதிகமானோர் சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாக சம்பள உயர்வு, பதவி உயர்வு பெறுமல் அவலப்படுகின்றோம். அதே நேரத்தில் ஏதோசில காரணங்களுக்காக ஒரு சில ஊழியர்கள்மட்டும் சிங்களத் தேர்ச்சியில்லாமலிருந்தும்தரம் 12 லிருந்து தரம் 8 ற்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. இது இவ்வாறு இருப்பினும் தரம் 12 லுள்ள நடத்துனர்களான எங்களுக்கு சம்பள உயர்வுதானும் தரப்படவில்லை.

தற்போதைய அரசின் கொள்கைகளுக்கும், சகலருக்கும், சம சந்தர்ப்பம் அளிப்பது எனவும், பெரும்பான்மை சிறுபான்மை என்ற பாகுபாடு இல்லாமல் நடத்துவது எனவும், சிங்களத் தேர்ச்சியில்லாவிடினும் அதன் காரணமாக ஒருவரும் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதே பல சந்தர்ப்பங்களில் இதனை ஜனாதிபதியும், பிரதம மந்திரியும் நீங்களுட்பட பல மந்திரிகள் கூறியிருக்கிறீர்கள், இவற்றை மனதில் கொண்டு எங்களுக்கு சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்குப் பெற்றுத் தருவீர்களென எதிர்பார்க்கிறோம்."

அக்கடிதத்தில் வடக்கு,கிழக்கு மாகாணங்களில் கிராம சேவகர் போன்ற உயர்பதவிகளிலிருப்பவர்களுக்கு சிங்களத் தேர்ச்சி அவசியமில்லை என்ற விதிவிலக்கு இருக்கும் போது, சாதாரணமாக சீட்டுக்களைக் கொடுத்துப் பணத்தை வாங்கும் எமக்குச் சிங்களத் தேர்ச்சி அவசியமில்லை' எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் இதுசம்பந்தமான விளக்கம்தர, வடக்கு கிழக்கு மாகாண நடத்துனர் குழு ஒன்றிற்கு வசதியான திகதி தரும்படியும் அதில் வேண்டப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள், ஜனாதிபதி, பிரதமர், போக்குவரத்து அமைச்சர், பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. [கே]

### தபாலகம் தரமுயர்வு

(வேலணை)

வேலணையில் தபால் அலுவலகம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து முதலாம்தரதபால் அலுவலகமாக தரமுயர்த்தப்படவுள்ளது. [க]

### ஏ. ஜி. ஏக்கு பாராட்டு

(மட்டக்களப்பு நிருபர்)

சூருவளி நிவாரணப் பணிகளை பிரதேச மட்டத்தில் நிறைவேற்றி வரும் உதவி மாகாண அதிபர்களில் வவுணதீவு அதிபர் திரு. சொர்ணவடிவேலின் அயராத சேவையை மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரை பாராட்டியுள்ளார்.

## நூனசித்தி வழங்காததினுல் மாணவர்கள் கவலை

(புலோலி)

யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் தொழில் கற்கைகளிலான தேசிய தராதரப் பயிற்சிநெறி மாணவர்கள் அதிர்ச்சியும், கவலையுமடைந்துள்ளனர்.

இப்பயிற்சி நெறிமாணவர்களுக்கு இவ்வருடம் நூனசித்தி வழங்கப்படாததே இதற்குக் காரணமாகும்.

கடந்த வருடம் தொழில் கற்கைகளிலான தேசிய தராதரப் பத்திரப் பயிற்சிநெறிக்கு நூனசித்தி வழங்கப்பட்டிருந்தது. ஆனுல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள இவ்வருடத்திற்கான பெறுபேறுகளில் எவருக்கும் நூனசித்தி வழங்கப்படவில்லை.

இதனுல், பிரஸ்தாப பயிற்சி நெறி மாணவர்கள் ஏமாற்றமும் கவலையும் அடைந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இத்தொழில் நுட்பக்கல்லூரி வணிக மாணவ மன்றச் செயலாளர் திரு. ஏ. என். எஸ் திருச்செல்வம் கல்வி அமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்தினவிற்கு நூனசித்தி வழங்க வேண்டிய அவசியம் பற்றி வலியுறுத்தி மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அம்மகஜரில் பிரஸ்தாப பயிற்சி நெறிக்கு 6 பாடங்களில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியுள்ளது என்றும் கடந்த வருடம் 5 பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு நூன சித்தி வழங்கப்பட்டது என்றும், இவ்வருடம் நூனசித்தி வழங்கப்படாததனுல் இப்பயிற்சிநெறி மாணவர்கள பெரிதும் பாதிப்படைந்துள்ளார்கள என்று குறிப்பிடப்பட்டுளளது.

ஏனைய பயிற்சி நெறிகளுக்கு நூனசித்தி வழங்கப்பட்டுளளதென்றும் தொழில் கற்கைகளிலான தேசிய தராதரப் பத்திர பயிற்சி நெறிக்கு நூனசித்தி வழங்கப்படாதது பாரபட்சமானது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுளளது.

### பதவி உயர்வு

(நெல்லியடி)

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எம். வேலும்மயிலும் உதவி சௌக்கிய அத்தியட்சகராக பதவியுயர்வு பெற்றுள்ளார்

இவர் ஜனவரி மாதம் தொடக்கம் பதுளை உதவி சௌக்கிய அத்தியட்சகராகப் பணிபுரிவார். (க)

### இடமாற்றம்

[சங்கானை]

சங்கானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக சப் இன்ஸ்பெக்டர் முத்துபண்டா தற்காலிகமாக இடமாற்றம் பெற்றுள்ளார். (க)

ஃ ஃ

(பண்டத்தரிப்பு)

நயினுதீவு சிராமசபை சித்த ஆயுர்வேத வைத்தியசாலை டாக்டர் வி. மாசிலாமணி ஜனவரி முதலாம் திகதி முதல் நாளுட்டான் சிராமசபை சித்தஆயுர்வேத வைத்திய சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார், நாளுட்டான் கிராமசபை வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் வி. மயில்வாகனம் நயினுதீவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பில்

## நெல்மூடைகளை பறிகொடுத்த விவசாயிகள் கலக்கம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு பிரதேசத்தில் வீசிய சூருவளியின்போது சேதமடைந்த நெல் சந்தைப் படுத்தும் சபையின் உத்தரவாதவிலைத்திட்ட நெற்களஞ்சியங்களிலிருந்து காணுமற்போன நெல் மூடைகளென படுவான்கரை விவசாயிகளிடமிருந்து சந்தேகத்தின்பேரில் பொலிசாரால் நெல்மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டக் கச்சேரியில்வைத்து படுவான் கரை விவசாயிகள் மட்டுநகர் முதலாவது எம். பி. திரு செ இராசதுரையிடம் செய்த புகாரைத் தொடர்ந்து அவர் மாவட்ட புனரமைப்புக் குழுவின் தலைவரும் நீதிஅமைச்சருமாகிய திரு கே. டபிள்யு தேவநாயகத்திடம் கேட்டுக் கொண்ட தற்கிணங்க மேற்படி விவசாயிகளை துன்புறுத்தாமல் இவற்றை உரியமுறைப்படி மீட்கும்படி அமைச்சர் தேவா பொலிசாரிடம் உத்தரவிட்டிருக்கிருர். ஆயினும் மேற்படி உத்தரவுக்கு முன்னர் பல கிராமங்களிலிருந்தும் விவசாயிகள வைத்திருந்த நெல்மூடைகளை பொலிசார் கைப்பற்றியிருந்தனர். அமைச்சரின் உத்தரவு இவ்வாறிருக்க நெல்லை இழந்த விவசாயிகள் குறித்து எதுவிதமுடிவும் மேற்கொள்ளப்படாதபடியால் செயவதறியாது அவர்கள கலங்கிநிற்கிருர்கள.

ஏராளமான விவசாயிகள விவசாய அறிமுக அட்டை போன்ற ஆதாரங்களை பொலிசாரிடம் காண்பித்தனர். இவற்றையிட்டு அவர்கள் பொருட்படுத்தவில்லை. நூற்றுக்கதிகமான விவசாயிகளும், கூலித் தொழிலாளர்களும் உணவுக்கும் விதைநெல் மூடைகளையும் விவசாயிகளைக் கொண்டு வாகனங்களில் ஏற்றிச்சென்றுவிட்டார்கள. (க)

## இன்று மாலைவரை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பகுதிகளில் தடைப்பட்டது.

மாங்குளம், புளியங்குளம் பகுதியில், பலத்தமழைபெய்ததினுல் சிலஇடங்களில்போக்குவரத்து தடைப்பட்டுளளது.

முல்லைத்தீவுப்பகுதியும்,வெளளத்தால் பெருமளவில் பாதிக்கப்பட்டுளளது.

யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும், இரு தினங்களாக பேய்மழை பெய்துவருவதால், பலர் வீடிழந்துளளனர், மழையுடன் இலேசாக காற்றும் வீசிக்கொண்டிருந்தது.

பாக உள்ள குளத்தின்நீர்மட்டம் அதிகரித்துவருகிறது இக்குளத்தின் நீர்மட்டம் கடந்த முறையும் அதிகரித்ததால் சில நாட்களாக அப்பாதை வழியாக போக்குவரத்து தடைப்பட்டது.

உடுப்பிட்டி பகுதியில் காற்றுடன் கூடிய கடும்மழை பெய்து வருகிறது.

பயிர்ச்செய்கைக்கு சேதம் உண்டாகலாமென அஞ்சப்படுகிறது.

கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து இங்கு மழைபெய்கிறது. [உடுப்பிட்டி நிரு]

### வெள்ளம்

[கோண்டாவில்]

மழை காரணமாக தலையாளி, நந்தாவில், மானிப்பாய் ஆகிய இடங்கள் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டுள்ளன.

மானிப்பாயில் உள்ள சுதுமலை அம்மன் கோவில் முன்

### மக்கள் குடிபெயரவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் நேற்று முழுநாளும் கடும்மழை பெய்து வெள்ளப் பெருக்கு ஏற்படக்கூடிய நிலைஏற்பட்ட போதிலும் மாநகரசபை விசேட ஆணையாளர் திரு. க. சிவஞானம் நடவடிக்கை எடுத்து மாநகரசபை ஊழியர்கள பல இடங்களிலும் வெள்ளம் பாய்ந்து செல்வதற்கான முயற்சிகள மேற்கொளளப்பட்டன, இதனுல் நேற்று மாலைவரை எவரும் குடிபெயர்ந்ததாகத் தகவல் கிடைக்கவில்லை,

### கிழக்கிலங்கை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

"நத்தார்தினத்தை நாம் குதூகலமாகக் கொண்டாடும் இவ்வேளையில், சூருவளியினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எமது மக்கள் துர்ப்பாக்கிய நிலைக்குத்தளளப்பட்டுளளனர் அவர்களுக்கு நாம் முடிந்தளவு உதவிகள செய்யவேண்டும்'' என்றும் தமது செய்தியில் அதிமேற்றிராணியார் தெரிவித்துளளார்.

### பஸ்சேவை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

தீவுப்பகுதியிலும் சிலசேவைகள் ரத்துச்செய்யப்பட்டதுடன், சில பஸ் சேவைகள் திசைதிருப்பி விடப்பட்டுள்ளன. அல்லைப்பிட்டி சேவையும், ஊர்காவற்றுறை-சாட்டி சேவையும் நேற்று நண்பகலுக்குப்பின்னர் நடைபெறவில்லை. மழை தொடர்ந்து பெய்யுமாளுல் இன்று பல சேவைகள் துண்டிக்கப்படலாமெனயாழ். டிப்போ உத்தியோகஸ்தர் ஒருவர் 'ஈழநாடு''ற்கு நேற்று இரவு தெரிவித்தார்.

#### ரயில் சேவை

காங்கேசன்துறையிலிருந்து செல்லும் சகல ரயில்சேவைகளும் நேற்று வழமைபோல நடைபெற்றன. இன்றும்காலை உத்தரதேவி வழமையான சேவையில் ஈடுபடுமென யாழ். ரயில்நிலைய அதிகாரி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார் (கெ)


## மரண அறிவித்தல்

### செல்வச்சந்நிதி விசாகரத்தினஐயர்

செல்வச்சந்நிதி பிரதமகுரு செ. விசாகரத்தின ஐயர் 24-12-78ல் இறைவனடி சேர்ந்துவிட்டார். ஈமைக்கிரியைகள் இன்று திங்கள் காலை10-00மணியளவில் தொண்டமனுற்றில் நடைபெறும்.

உறவினர்களும், நண்பர்களும் தயவு செய்து இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

1148



## மரண அறிவித்தல்

### திருமதி திருமலைநாயகிசாந்தலிங்கம் (மகேஸ்வரி)

யாழ்ப்பாணம் பிரப்பங்குளம் ஒழுங்கையைச்சேர்ந்த திருமதி திருமலைநாயகி (மகேஸ்வரி) சாந்தலிங்கம் அவர்கள் காலமாகிவிட்டார்கள். இவர் பிரபல வர்த்தகர் V K. சாந்தலிங்கத்தின் அன்பு மனைவியும் பாக்கியலெட்சுமி கனகரெத்தினம் (யாழ்ப்பாணம் கூல்பார்) தனநாயகம் (சிவாஸ் கூல் & ரீ பார்), யசோதராதேவி, ரவீந்திரகுமார் (கொழும்புகூல்பார்) செந்தில்நாதன், சிவ யோகநாதன் யோகராசா,யோகானந்தராசா ஆகியோரின் அன்புத்தாயாரும், சிவகுணம் (O. I. C. விற்பனை இலாகா, மானிப்பாய்),தேவிகாராணி ஆகியோரின் மாமியும், குணரெத்தினம், பரமலிங்கம், பராசக்தி, திலகவதி, நகுலாம்பிகை ஆகியோரின் சகோதரியும் ஆவார். அன்னாரது பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக யாழ். 145/3, பிரப்பங்குளம் ஒழுங்கையிலிருந்து கோம்பயன் மணல் மயானத்திற்கு இன்று பி. ப. 6 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

1149


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] 68-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம்25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது,

The Eelanaadu Post Box No: 49, Telegrams Eelanaad Telephone: 869, Registered as a Newspaper in Sri Lanka.